ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதிவிசேஷமானது
අංක 1690/23 - 2011 ජනවාරි 28 වැනි සිකුරාදා - 2011.01.28
*1690/23 ஆம் இலக்கம் - 2011 ஆம் ஆண்டு சனவரி மாதம் 28 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*
(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### 1954 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க தேசிய வீடமைப்புச் சட்டம்

*25(2) ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*நிர்மாணத்துறை, பொறியியல் சேவைகள், வீடமைப்பு மற்றும் பொது வசதிகள் அமைச்சரான விமல் வீரவங்ச ஆகிய நான், 1954 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க தேசிய வீடமைப்புச் சட்டத்தின் 25(2) ஆம் பிரிவில் எனக்களிக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம் 2010, திசெம்பர் மாதம் 14 ஆம் திகதியிலிருந்து அமுலுக்கு வரும்வகையில் 1954 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க தேசிய வீடமைப்புச் சட்டத்தின் கீழ் உரிய முறையில் நிறுவப்பட்டுள்ள நேஷன்ஸ் பில்டிங் சொசயிட்டி லிமிடெட் (ஏற்கனவே இது செலிங்கோ பில்டிங் சொசயிட்டி லிமிடெட் எனும் பெயரில் அறியப்பட்டுள்ளது) என்ற கம்பெனிக்கு 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பெனிகள் சட்டத்தின்* XII *ஆம் மற்றும்* XIII *ஆம் பிரிவுகள் ஏற்புடையனவாகின்றன என்பதை இக்கட்டளையினால் பிரகடனப்படுத்துவதோடு, மேலும் இக்கட்டளையானது செல்லுபடியற்றதாக்கும்வரை வலுவில் இருக்குமென்பதையும் இத்தால் அறிவிக்கிறேன்.*

விமல் வீரவங்ச (பா. உ),
நிர்மாணத்துறை, பொறியியல் சேவைகள்,
வீடமைப்பு மற்றும் பொது வசதிகள் அமைச்சர்.

நிர்மாணத்துறை, பொறியியல் சேவைகள்,
வீடமைப்பு மற்றும் பொது வசதிகள் அமைச்சு,
2 வது மாடி, ''செத்சிறிபாய'',
பத்தரமுல்லை,
2011, சனவரி 24.

*02-252*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.